All Rights Reserved

மேல் மாகாண கல்வித் திணைக்களம் - கொழும்பு கல்வி வலயம்
Western Provincial Education Department - Colombo Educational Zone

இரண்டாம் தவணை மதிப்பீடு - 2017
**Second Term Evaluation - 2017**

| | | |
|---|---|---|
| தரம் 6<br>Grade 6 | தமிழ் மொழியும் இலக்கியமும்<br>Tamil Language & Literature | இரண்டு மணித்தியாலங்கள்<br>Two Hours |

♦ **மிகச் சரியான விடையினைத் தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.**

(1) "நீ எழுதிய மடல் கிடைத்தது" இங்கு மடல் என்பதன் ஒத்த சொல்
1. கடிதம் 2. கவிதை 3. கட்டுரை 4. விடைத்தாள்

(2) "மன்னவன் கை சோர்ந்து மெய் சோர்ந்து கீழே விழுந்தான்" இங்கு மெய் என்பதன் ஒத்த சொல்
1. கண் 2. காது 3. சரீரம் 4. கால்

(3) "விருந்தினரை முகம் மலர்ந்து வரவேற்றனர்" மலர்தல் என்பதன் எதிர்க்கருத்துச் சொல்
1. கூம்புதல் 2. விரிதல் 3. தூற்றுதல் 4. ஏசுதல்

(4) "தமிழ்நிலா, தேன்மொழி காதில் ஏதோ இரகசியம் சொல்கிறாள்" இங்கு இரகசியம் என்பதன் எதிர்க்கருத்து
1. பரமரகசியம் 2. பரகசியம் 3. அமைதி 4. அந்தரங்கம்

(5) குளவிக் கூட்டைக் கடுவன் கண்டது. கடுவன் என்பதன் பெண்பாற் சொல்
1. மந்தி 2. குரங்கு 3. வானரம் 4. பேடு

(6) இடையின மெய் எழுத்துக்களாவன
1. ங், ஞ் 2. ய், ர் 3. க், ச் 4. ம், ண்

(7) அறம் செய விரும்பு என்றார் ஔவைப் பிராட்டியார் இவ்வாக்கியத்தில் இடம் பெறும் நிறுத்தற் குறியீடுகள்
1. மேற்கோள் குறி, முற்றுப்புள்ளி
2. வினாக்குறி, வியப்புக்குறி
3. முற்றுப்புள்ளி, வியப்புக்குறி
4. அடைப்புக்குறி, முற்றுப்புள்ளி

(8) பத்து + இரண்டு என்பதைச் சேர்த்தெழுதினால்
1. பத்திரண்டு 2. பன்னிரண்டு 3. பன்னிரெண்டு 4. பன்னியிரண்டு

(9) உயிர் நெடில் எழுத்துக்களின் எண்ணிக்கை
1. 5 2. 7 3. 12 4. 18

(10) நண்பர்கள், உறவினர்கள் ஆகியோருக்கு எழுதப்படும் கடிதம்
1. தொழின் முறைக்கடிதம்
2. முறையீட்டுக் கடிதம்
3. உறவுமுறைக் கடிதம்
4. விண்ணப்பக் கடிதம்

(11) பேசும் பொழுது தெளிவாகப் பேசுவோம் இவ்வாக்கியத்தின் எழுவாய்
1. பேசுவோம் 2. தெளிவு 3. நாம் 4. பொழுது

(12) அவர்கள் வருகிறார்கள் என்னும் வாக்கியம்
1. படர்க்கை ஒருமை
2. படர்க்கை பன்மை
3. முன்னிலை ஒருமை
4. முன்னிலை பன்மை

Log on:-www.knightcreations.tk

(13) அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு என்ற பழமொழியின் கருத்து
1. ஒற்றுமை 2. வேற்றுமை 3. ஒழுங்கு 4. ஆவணம்

(14) பின்வருவனவற்றுள் வாக்கியம் அல்லாதது
1. தம்பி வா 2. மாணவர்கள் படித்தார்கள்
3. பசு ஓடியது 4. கமலா வந்து

(15) E - mail என்பதன் தமிழ் வாக்கியம்
1. ஊடகம் 2. இணையம் 3. தொலைநகல் 4. மின்னஞ்சல்

(16) கடந்த வாரம் தம்பி தாத்தாவுடன் கண்டிக்குச் .................................
1. சென்றார்கள் 2. சென்றனர் 3. சென்றான் 4. சென்றது

(17) "வெத்திலத் தட்டைத்தைத் தா" இதில் வெத்தில என்பதன் சரியான வடிவம்
1. வெத்திலை 2. வெத்தில 3. வேத்திலை 4. வெற்றிலை

(18) "பறவைகள் பலவிதம்" என்ற நாடகத்தினை எழுதியவர் யார்
1. தமிழ்ச் செல்வன் 2. அழ.வள்ளியப்பா
3. கோகிலா மகேந்திரன் 4. சோமசுந்தரப்புலவர்

(19) இருபத்தைந்தாவது ஆண்டு நிறைவில் எடுக்கப்படும் விழா
1. மணிவிழா 2. வைரவிழா 3. வெள்ளிவிழா 4. பவளவிழா

(20) "நாங்கள் யாழ்ப்பாணம் போவோம்""போவாம்" என்பது
1. இறந்தகாலம் 2. நிகழ்காலம் 3. எதிர்காலம் 4. தற்காலம்

## பகுதி - II

♦ **எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.**

(1) நீர் வகுப்பறையில் மேற்கொண்ட கணிப்பீட்டினை ஆதாரமாகக் கொண்டு பின்வரும் வினாக்களுக்கு விடை தருக
1. உமக்கு ஆசிரியரால் வழங்கப்பட்ட கணிப்பீடு யாது?
2. இக்கணிப்பீடு தொடர்பாக ஆசிரியர் உமக்கு வழங்கிய அறிவுரைகள் மூன்றினைக் குறிப்பிடுக.
3. இக் கணிப்பீட்டை மேற்கொண்டதால் நீர் பெற்ற பயன்கள் மூன்றினைக் குறிப்பிடுக.
4. கணிப்பீட்டின் போது நீர் எதிர்கொண்ட பிரச்சினைகள் இரண்டினைத் தருக.
5. அப்பிரச்சினைகளை தீர்ப்பதற்கு நீர் மேற்கொண்ட தீர்வுகள் இரண்டினை குறிப்பிடுக.

(16 புள்ளிகள்)

(2) பின்வரும் தலைப்புகளுள் ஒன்றினை தெரிவு செய்து 150 சொற்களில் கட்டுரை எழுதுக.
1. மாலை நேரத்துக் கடற்கரைக்காட்சி
2. உழவுத்தொழில்
3. நான் விரும்பும் பெரியார்
4. பாடசாலையில் நடைபெற்ற பரிசளிப்பு விழா (14 புள்ளிகள்)

(3) கீழே தரப்பட்டுள்ள பாடலை வாசித்து தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.

பாலும் தேனும் பாட்டிலே
பண்பும் கலந்து ஊட்டியே
நாளும் நிலைத்தாள் நாட்டிலே
நல்ல ஔவைப் பாட்டியே

ஊட்டம் பெற்றுச் சிறுவரும்

Log on:-www.knightcreations.tk

உவந்து படித்துச் சிறந்திட
கூட்டிச் சிறப்பாய்க் குணங்களை
கொடுத்தாள் பாட்டாய் இனித்திட

ஆத்திச்சூடி கொன்றை வேந்தன்
ஆன்ற நல்வழி மூதுரையும்
சாத்துக்குடியாய் பிழிந்தெடுத்து
சக்கரை போட்டுக் குடிக்க வைத்தாள்

வில்லாய் முதுகு கூன் விழுந்தும்
விரைந்த நாணாய்க் கோல் பிடித்தும்
வெல்லும் அம்பாய் கவிகூறும்
வெள்ளப் பாவை ஔவையே!

1. ஔவைப் பாட்டி எதனை எமக்கு ஊட்டினாள்?
2. ஔவைப் பாட்டியின் பாடல்கள் சிறுவர்களுக்கு எதனைக் கொடுத்தன?
3. ஔவைப் பாட்டி அருளிய நூல்கள் எவை?
4. பாட்டியின் தோற்றம் பாடலில் எவ்வாறு காட்டப்பட்டுள்ளது?
5. பின்வருவனவற்றுக்கு பொருள் தருக.
   அ) சிறுவர் ஆ) பாட்டு

(4) பாடநூலை ஆதாரமாகக் கொண்டு பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.
1. கணவனை இழந்தவளாம் கையிற் சிலம்பொன்று ஏந்தியுள்ளாள்
   சிலம்பேந்தியவள் யார்? அவள் கணவன் யார்? அவன் யாரிடம் நீதி கேட்க வந்தாள்?
2. பறக்கும் இயல்பற்ற ஓடும் பறவைகள் இரண்டு தருக.
3. தென்ன மரக்கும்மி என்ற பாடத்தில் பிரதானமாகக் கூறப்பட்டுள்ளது யாது?
4. நான் பாடத்தான் போகிறேன் உனக்காக அல்ல என் இனத்தவர் எல்லோரையும்
   அழைப்பதற்காக யாரால் யாருக்கு எந்தச் சந்தர்ப்பத்தில் கூறப்பட்டது?
5. செய்திகளை அறிய உதவும் ஊடகங்கள் எவை?

(5) பொருத்தமான சொல்லை வைத்து இடைவெளியை நிரப்புக.
தகதக /குளுகுளு /குறுகுறு /கலகல /கலீர்கலீர் /கணீர்கணீர் /கடகட /கமகம
1. கோயில் மணியோசை ...................................... என ஒலித்தது
2. மல்லிகைப் பூ .................................. என வாசனை வீசியது
3. மாலை நேரம் வீசிய காற்று ............................................ என இதமாக இருந்தது
4. பேரனின் பேச்சைக் கேட்ட பாட்டி .................................... என சிரித்தாள்
5. தங்க நகைகள் ..................................... என மின்னின.

Log on:-www.knightcreations.tk
Scanned by www.knightcreations.tk